[1973 நவம்பர் 22

கிராம நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் சாலைகள் அபிவிருத்தி

திரு. எல். பலராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் கிராம நெடுஞ்சாலைத் திட்டத்தின் கீழ் எந்தெந்த சாலைகளை அபிவிருத்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது?

(இ) அவைகளின் மதிப்பீடு யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஒரு விவர அறிக்கை @ சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த விவரப் பட்டியலில் யூனியனுக்கு யூனியன் அதிகமான வித்தியாசம் உள்ள தொகை ஒதுக்கப்படுவதைத் தவிர்த்து ஒவ்வொரு யூனியனுக்கும் சமமாக ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். பல ஊர்களில் சாலையில்லாத பிரச்சினைகள் தீர இதுபோன்ற ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இப்போது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ரூபாய் 22,333 வீதம் செலவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்த மாதிரி சாலைகளை அமைப்பதற்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அடுத்த ஆண்டிலிருந்து அந்தந்தச் சாலைகளினுடைய தரம், அவைகளின் அளவு இவைகளைப் பொறுத்து ஒதுக்கலாமா என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது.

Co-operative Credit Bank for Employees.

* 53. *Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether employees working in W.S. Insulators of India Limited at Porur and Wigs India at Ambattur have applied to the Government, seeking permission to form a Co-operative Credit Bank ; and

(*b*) if so, the action taken thereon ?

@ 225-230 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு நாணய வங்கி.

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) போரூரில் உள்ள டபிள்யூ. எஸ். இன்சுலேட்டர்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், அம்பத்தூரில் உள்ள விக் இந்தியா ஆகிய தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்கள் கூட்டுறவு நாணய வங்கி வைத்துக் கொள்வதற்கு அனுமதி கேட்டு அரசுக்கு விண்ணப்பித்து உள்ளார்களா ?

(இ) ஆமெனில், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) விக் இந்தியா மற்றும் டபில்யூ எஸ். இன்சுலேட்டர்ஸ் ஆகியவற்றின் ஊழியர்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க மாநில கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால், செங்கற்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை கூட்டுறவுச் சங்க துணைப்பதிவாளர் அனுமதிக்கப்பட்டிருக்கிறுர்.

Ration Shops in Madras city.

* 54. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the number of Government Ration shops in Madras city; and

(*b*) whether their number is found sufficient to cater to the public of Madras City; and

(*c*) if not, the proposals the Government have to redress the difficulties of the public in the purchase of essential foodgrains ?

சென்னை மாநகரிலுள்ள உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகள் எத்தனை ?